31st October 1962]

போலீசாருக்கும் அநீதியானது; போலீசாருடைய குடும்பங்களில் நல்ல எண்ணம் வைத்து, அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று உதவி அளிக்கின்றார்களே அவர்களுக்கும் அநீதியானது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எவ்வளவு நல்ல காரியமாக இருந்தாலுங்கூட, செய்யக்கூடிய முறையும் நல்ல முறையாக இருக்க வேண்டும். இன்ஸ்பெக்டர்-ஜெனரல் போன்ற பெரிய போலீஸ் அதிகாரிகள் நேரடியாக நன்கொடை வசூல் செய்வதை ஓரளவுக்கு மறைமுகமான நிர்ப்பந்தமாக மக்கள் எடுத்துக்கொண்டு விடமாட்டார்களா? தாட்சண்யம் தட்ட முடியாமல் பணம் கொடுக்கவேண்டும் என்ற நிலையை அது மக்களுக்கு ஏற்படுத்தி விடும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு வேறு முறை ஏதாவது வகுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார், யாரிடம், எப்படி வசூல் பண்ணுவது என்பதெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கத்தின் அனுமதியின் பேரில்தான் நடைபெறுகிறது. ஆகையால், தவறு நடைபெறவொட்டாமல் பாதுகாத்துக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு. அவ்வாறு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாநில சிறுசேமிப்பு போர்டு

*1010-ஐ. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில சிறுசேமிப்பு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறதா?

(இ) அந்த போர்டில் உத்தியோக சார்பற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(உ) அவர்களுடைய அலுவல்கள் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) 1. to assit and advise Government on measures necessary to spread the National Savings Movement in the State and on the ways and means of popularising the Small Savings Scheme, and

2. to advice the Government in specific organisational and publicity matters relating to National Savings Movement.

Devagandala Community

*1010-J Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government propose to notify the Devagandala Community as a backward community?

THE HON. SRI P. KAKKAN: No, Sir.

[31st October 1962

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : காண்டலா என்ற சமுதாய மும் தேவகாண்டலா என்ற சமுதாயம் ஒன்ருக இருக்கின்றன. காண்டலா என்ற சமுதாயத்தை பாக்வேர்ட் கிளாஸில் வைத் திருப்பதால் தேவகாண்டலா சமுதாயத்தையும் பாக்வேர்ட் லிஸ் டில் வைக்க அரசாங்கம் முன்வருமா? இந்தச் சமுதாயம் குறை வான ஜனத்தொகை கொண்டுள்ளதால் இந்தச் சலுகையை இந்தச் சமுதாயத்திற்கும் நீடிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்வேர்ட் கம்யூனிட்டீஸ் லிஸ்ட் பற்றி பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பல பேர்கள் 'எங்களைச் சேருங்கள், எங்களைச் சேருங்கள்' என்று வற்புறுத்தி வருகிருர்கள். அரசாங்கம் இனிமேல் அப்படிச் செய்வதற்கில்லை என்று முடிவு எடுத்திருக்கிறது.

சமூக நல ஊழியர்கள்

* **1010-கே. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியனில் உள்ள சமூக நல ஊழியர் களின் வேலைகள் என்ன?

(இ) அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிருர்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The duties of the Social Welfare Workers are

(i) To assist the Social Education Organisers in implementing the Community Development Programme; and

(ii) To attend to propaganda in respect of Harijan Uplift, Prohibition and Publicity for the Five-Year Plans.

(*b*) Political sufferers and members of their families alone are eligible for appointment to the post. No educational qualification has been prescribed for the post. Only people with good general knowledge about the Community Development Programme and the nation building activities and with rural bias and capacity to do propaganda are selected for the post.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள இந்தச் சமூக நல ஊழியர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரசாரம் செய்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி அரசாங்கத்தினிடம் தகவல் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது புகார் இருந்தால் அதை எழுதி அனுப்பலாம்.

* 1010-L *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of Social Welfare Workers in the Block Development Offices are created for giving employment to the Political sufferers; and